Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 68 துன்மார்க்கன் தேவனை அசட்டை பண்ணி, ... தன் இருதயத்தில் சொல்லிக் கொள்வானேன்? சங்.10:13 ஜனவரி 2022 No.1

சிங்காசனத்தண்டை சேர தைரியம்

Boldness at the throne

Charles H.Spurgeon (1834-1892)

கிறிஸ்தவனுடைய வாழ்வில் ஜெபத்திற்கு முக்கியமான இடம் உண்டு. அவனது உறுதி, மகிழ்ச்சி, வளர்ச்சி, பயன்படும் தன்மை யாவும் அவனது ஜெபத்தையே சார்ந்துள்ளது. ஜெபத்தின் உயரிய முக்கியத்துவத்தின் காரணமாக அது வேதவசனங்களில் அதிக முக்கிய இடத்தைப் பெறுகிறது. தூய ஆவியான வரும் நாம் ஜெபிக்கும்படி நம்மைத் தூண்டுகிறார். "ஆதலால் நாம் இரக்கத்தை பெறவும் ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தண்டையில் சேரக்கடவோம்" எபி.4:16.

ஒரு விசுவாசி என்ற நிலையில் நாம் ஆலயத்தின் வெளிப்பிரகாரத் திலோ, ஆசாரியரின் பிரகாரத்திலோ அல்ல அவற்றைக் கடந்து கிருபாசனத்தை கிட்டிச் சேருகிறோம். எதற்காக? இரக்கத்தைப் பெறவும் ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யும் கிருபையை அடையவும் என்பதற்காகவே. எனவே அனைத்து விசுவாசிகளும் இந்த வாய்ப்பினை உணர்ந்து கொள்வது அவசியம். இதற் காகவே அவர்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் புது சிருஷ்டிகளாக்கப்பட்டுள்ளார்கள்.

கிருபையின் சிங்காசனம்

ஜெபத்தின் மூலமாக நாம் தேவனைக் கிட்டிச்சேரும்போது கிருபையின் சிங்காசனத்தில் வீற்றிருக்கிற இராஜாவுக்கு முன்பாக வருகிறோம். இதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். நாம் சரியாக ஜெபிக்கும் போது, தேவனோடு கிருபையின் அடிப்படையில்தான் வருகிறோம். நமது பதில்கள் நமது தகுதியினாலல்ல, தேவ னுடைய அளவற்ற இரக்கம், கிருபை ஆகியவற்றால் மட்டுமே வருகின்றன.

கிருபை தேவை என்று உணர்ந்த வர்கள் அவரது கிருபாசனத்தைக் கிட்டிச் சேர பயப்பட வேண்டாம். கிறிஸ்து நமது இயற்கைத் தன்மையை தம்மீது நமக்காக எடுத்துக்கொண்டு நமக்குப் பதிலாக பாடு அனுபவித்தார். பாவி களாகிய நாம் கிட்டிச் சேர வேண்டிய சிங்காசனம் மிகமிக உயரியதும் அள வற்ற கிருபை நிறைந்ததுமாகும். அந்த கிருபை மன்னிக்கவும் மறுரூபப்படுத்த வும், நம்மைப் பிள்ளைகளாக ஏற்றுக் கொள்ளவும், பாதுகாத்து, பரிசுத்தப் படுத்தி, பரிபூரணராக்கி, நித்திய மகிமையில் சேர்த்துக் கொள்ளவும் கூடியதாயிருக்கிறது.

தைரியமாக வாருங்கள்

தைரியமாக என்பது, எந்தத் தடையுமின்றி எல்லாவிதமான விண்ணப்பங்களோடும் வரலாம் எனக் காட்டுகிறது. உங்கள் இருதயத்தில் எல்லாவித பாரத்தோடும் வரலாம். ஏதோ பெரிய காரியம் தேவையா? அவரிடம் வந்து கேளுங்கள். மிகச் சிறிய தேவையா? அதற்காகவும் அவரிடம் வர தயக்கம் வேண்டாம். ஒரு கவலை உங்களை அதிகமாக அழுத்துகிறதா? கிருபாசனத் தின் முன்னால் வந்து எல்லாவற்றையும் கூறி எல்லா பாரத்தையும் அவர் மேல் வைத்துவிடுங்கள். அவர் உங்களை விசாரிக்கிறவர் 1 பேது.5:7. கிறிஸ்து இயேசுவை நீங்கள் விசுவாசிக்கிறவர் களானால் தேவனைப் பிதாவாக எண்ணி அவரிடம் பேசுங்கள். உலக தகப்பனை விட அவர் பாசமுள்ளவரென்று எண்ணி, அவரில் நம்பிக்கையுடன் வாருங்கள்.

'தைரியமாக' என்ற பதம் நாம் விடாமுயற்சியுடன் வரவேண்டுமென்று தெரிவிக்கிறது. கடும் முயற்சியுடன் வர வேண்டும். ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள நாம் காத்திருக்கும் போது தான் அதின் மதிப்பை நாம் உணரும்படி அவர் செய்கிறார். நாம் மறுபடியும் மறுபடியும் கேட்கவும் தேடவும் தட்டவும் அவர் கேட்கிறார். பெற்றுக்கொள்ளும் வரை நாம் திருப்தியடையக்கூடாது. நாம் கேட்பது அவரது சித்தத்திற்கேற்றபடி இருக்கவேண்டும். இயேசு சொன்ன உவமையில் அந்த அநீதியுள்ள நியாயாதி பதியிடம் மறுபடியும் மறுபடியும் வந்து அவனைத் தொந்தரவு செய்து பெற்றுக் கொண்ட விதவையைப் போல பிடிவாத மாயிருக்க வேண்டும்.

தைரியத்திற்கான காரணங்கள்

நாம் ஜெபிக்க அழைக்கப்பட்டி ருக்கிறோம். நமது ஜெபத்தைக் கேட்க மனதில்லாவிட்டால் தேவன் நம்மை ஜெபிக்கும்படி அழைக்க மாட்டார். எந்த ஒரு சுயபுத்தியுள்ள மனிதனும் தனது நண்பர்களை விருந்திற்கென்று அழைத்து விட்டு வெறுமையாக அனுப்பமாட்டான். நமக்குப் பல ஆசீர்வாதங்களை வைத்துக் கொண்டுதான் தேவன் இரக்க ஆசனத் திற்கு நேராக நம்மை அழைக்கிறார். அவர் நமக்காகக் காத்துக்கொண்டுமிருக்கிறார். எனவே நாம் தைரியத்தோடே கிருபா சனத்தண்டையில் கிட்டிச் சேரலாம்.

அன்புகூராமல் கொடுக்கமுடியும், ஆனால் கொடுக் காமல் அன்புகூர முடியாது – ஏமி கார்மிக்கேல்

கிருபாசனத்தண்டையில் வீற்றிருக்கும் ராஜாவின் குணாதிசயங்களை மனதில் கொண்டு வருவோம் :-

அவர் முடிவற்றவர். இரக்கமும் அன்பும் நிறைந்தவர். தனது சிருஷ்டி களை ஆசீர்வதிப்பதில் அளவற்ற மகிழ்ச்சி கொள்பவர். அவருடைய வல்லமைக்கு அளவேயில்லை. "நாம் வேண்டிக் கொள் ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் அதிக மாக நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே நமக்குச் செய்ய வல்லவர்" எபேசி.3:28. அவரது ஞானம் அளவுகடந்தது. ஆக நமக்கு மிகச்சிறந்த வழியில் மிகுந்த நன்மையானவைகளை நமக்குத் தருவார். அவரைவிட நாம் எதிலும் கடந்து நிற்கமுடியாது. எனவே அவரது வல்லமை, விருப்பம் ஆகியவை களுக்கேற்றபடி நமது விண்ணப்பங் களும் இருக்க வேண்டும்.

நீங்கள் கிருபாசனத்தண்டை வரும்போது ஒரு ராஜாவிடம் வருகி றோம், ராஜாவைப்போல் அவர் பதிலளிப்பார் என்று எண்ணுகிறீர்களா? உங்கள் வாயை விரிவாய் திறந்து அதை நிரப்பும்படி அவரிடம் கேட்பீர்களா? தேவனாகிய கிறிஸ்து இயேசு இரக்க ஆசனத்தில் வீற்றிருக்கிறார். அவரிடம் தைரியமாகக் கிட்டிச் சேருவோம்.

சிங்காசனத்தில் வீற்றிருக்கும் ராஜாவுடன் உங்கள் தொடர்பு எப்படி யிருக்கிறதென்று எண்ணிப்பாருங்கள். நீங்கள் அவரது பணியாட்கள் மட்டு மல்ல அவரது பிள்ளைகளும், அவரது சுதந்தரவாளிகளும், கிறிஸ்து இயேசு வுடன் உடன் பங்காளிகளுமாயிருக் கிறீர்கள். நீங்கள் கேட்பவைகளெல்லாம் ஏற்கெனவே உங்களுக்குரியவைகள். ஏற்ற வேளையில் அவைகளைக் கைவசப் படுத்துங்கள். ஒரு குழந்தை தன் அன்பான தகப்பனின் முன்னால் பயந்து நடுங்குமா? ஒரு மகன் அடிமையைப் போல் நடந்து கொள்வானா? எனவே நாம் நேசிக்கும் பரம தகப்பனிடம் நமது விண்ணப்பத்தை நடுங்குகிற கரங்க ளோடு கொடுக்க அவசியமில்லை. எனக்குள் பூரண அன்பிருந்தால் அது பயத்தைப் புறம்பே தள்ளிவிடுமே 1 யோவா.4:18. தேவ பிள்ளைகளாகிய நாம் கிறிஸ்து இயேசுவிலுள்ள விசுவாசத் தினால் தைரியத்தோடே கிருபாசனத் தண்டை சேருவோம்.

(3-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்பு

மணியாடர் அனுப்பும்போது, கீழே இருக்கும் மாதிரிபடி உங்கள் பதிவு எண்ணை கட்டாயம் எழுதுங்கள்.

Pr. Arputharaj E. VN 00980 M
Srivilliputhur - 626 138.
Phone : 9786xxxxxx

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

2022-ம் ஆண்டு பத்திரிகை அனுப்ப

1. **வருகையின் தூதன் ஊழியத்தை தினந்தோறும் உங்கள் ஜெபத்தினாலும், மாதந்தோறும் உங்கள் காணிக்கையினாலும் தாங்குங்கள்.**
2. மாதந்தோறும் தபாலில் / வங்கியில் அனுப்ப இயலாதவர்கள் வருடத்திற்கு ஒரு முறை குறைந்தபட்சம் ரூபாய் 500 அனுப்புங்கள்.
3. உங்கள் பிறந்த நாள், திருமண நாள், பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் பிறந்த நாள் போன்ற மகிழ்ச்சியான தினங்களில், ஆண்டவருடைய ஊழியத்திற்கு காணிக்கை அனுப்பி ஆண்டவரின் ஆசீர்வாதத்தை பெறுங்கள்.

வாக்குத்தத்தம்

பசியுள்ளவனிடத்தில் உன் ஆத்துமாவைச் சாய்த்து, சிறுமைப்பட்ட ஆத்துமாவைத் திருப்தியாக்கினால், அப்பொழுது இருளில் உன் வெளிச்சம் உதித்து, உன் அந்தகாரம் மத்தியானத்தைப் போலாகும்.

கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்; நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும், வற்றாத நீரூற்றைப் போலவும் இருப்பாய். ஏசாயா 58:10,11

நன்றி கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

புத்தாண்டு வாழ்த்து

"**வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்; உமது பாதைகள் நெய்யாய் பொழிகிறது**". வாசகர் அனைவருக்கும் எங்கள் அன்பான புத்தாண்டு வாழ்த்துக்கள்!

புத்தாண்டு வாக்குத்தத்தம்

"**கர்த்தர் தாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார்; அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம்**" உபாகமம் 31:8.

தேவ ஆலோசனை

1. "இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் (வேத புத்தகம்) உன் வாயை விட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, **இரவும் பகலும்** அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்து கொள்ளுவாய்" யோசுவா 1:8.

"இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது" வெளி.1:3.

2. "ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள் என்றார்" லூக்கா.21:26.

"இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்" கொலோ.4:2.

நீங்கள் ஆண்டு முழுவதும் அனுப்பிய அன்பின் காணிக்கைகளுக்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவரையும் வாழ்த்தி, இதயத்தின் ஆழத்திலிருந்து எனது நன்றியை தெரிவிக்கிறேன்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ ஆவியானவர் உங்களை வழிநடத்துவாராக.

உங்கள் அன்பு சகோதரன்
வெஸ்லி தேவதாசன்
சாமுவேல் ஃபின்னி

2022 ஆண்டவரைப் பின்பற்றும் ஆண்டு
Year of following the LORD

ஜெப கடிதம்

ஆண்டவருடைய கிருபையினால் சுமார் 28 ஆண்டுகள் கன்னியாகுமரி கடற்கரை அருகில் உள்ள C.S.I. வளாகத்தில் வருடத்திற்கு ஒருமுறை, **முதல் வெள்ளிக் கிழமை** (First Friday of every Year) தேசத்தின் க்ஷேமத்திற்காக ஒரு உபவாச ஜெபம் நடத்தி வந்தோம்.

கர்த்தருடைய தெளிவான வழிநடத்துதலின்படி, வெளி மாவட்டங்களுக்கு போக ஏவப்பட்டு, 2013-ம் ஆண்டு தூத்துக்குடி இயேசு நம்மோடு சபையிலும், 2014-ம் ஆண்டு பாளையங்கோட்டை காது கேளாதோர் பள்ளியிலும், 2015-ம் ஆண்டு சிவகாசி ஷெக்கைனா A.G. சபையிலும் வருடத்திற்கு ஒருமுறை உபவாச ஜெபங்களை நடத்தினோம்.

2016-ம் ஆண்டு **மாதந்தோறும்** உபவாச ஜெபங்களை நடத்த கர்த்தர் சொன்னதினால், 2016 முதல் 2020 வரை ஆங்காங்கே உள்ள **45** சபைகளில் உபவாச ஜெபங்களை நடத்த தேவன் இரக்கம் பாராட்டினார். இவற்றில் வெளிமாநிலங்களான பாண்டிச்சேரி, கர்நாடகா, பாம்பே, டெல்கி, அந்தமான் ஆகிய இடங்களும் அடங்கும்.

ஆண்டவருக்குச் சித்தமானால், 2022-ம் ஆண்டு 8-ம் பக்கம் உள்ள அட்டவணைப்படி, உபவாச ஜெபங்களை ஒழுங்கு செய்திருக்கிறோம். இந்த உபவாச ஜெபங்களில், குஜராத்தில் ஊழியம் செய்யும் எனது சகோதரி திருமதி **கிறிஸ்டி சாமுவேல்** அவர்கள் மகன் சகோ. **கிப்சன் சாமுவேல்,** அவர்களின் North India Missionary Society (NIMS) போதகர் **A. அற்புதராஜ்,** இந்திய அருட்பணி இயக்கம் (I.E.M) மிஷனெரி பாஸ்டர் **K. துரைசிங்,** J.S.C. சபை போதகர் **W. பிரகாஷ்,** எனது மகன் **W. சாமுவேல் ஃபின்னி** ஆகியோர் என்னுடன் இணைந்து இந்த 7 மணி நேர உபவாச ஜெபத்தை நடத்துவார்கள்.

"நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன்" என்று அன்புள்ள **தேவன்** அங்கலாய்க்கிறார் எசேக்.22:30.

(8-ம் பக்கம் பார்க்க)

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் - 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வங்கி வழியாக காணிக்கை அனுப்புவோர்
உடனே எங்களுக்கு SMS அனுப்புங்கள்
Mobile : 95432 21008, 9489740295, e-mail:varukayinthoothan@hotmail.com

பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

(1-ம் பக்க தொடர்ச்சி)

நாம் எப்படி ஜெபிக்க வேண்டுமென்று கற்றுத்தர தூய ஆவியானவர் நமக்கு அருளப்பட்டிருக்கிறார். அவர் தேவனுடைய விருப்பத்தை அறிந்திருக்கிறபடியால் அவர் விரும்பாததை நாம் கேட்காதபடி நம்மை நடத்துவார். தேவனிடத்திலிருந்து வரும் ஆசீர்வாதத்தின் நிழலாக ஜெபம் அமைகிறது. தேவனுடைய கட்டளை நிறைவேற்றப்படுமுன் அவற்றின் நிழலை விசுவாசியின் இருதயத்தில் தூய ஆவியானவர் வல்லமையாய் ஏற்படுத்துவதால், அவன் ஜெபிக்கும் போது அவர் விரும்பியதை மட்டுமே கேட்கிறான். நாமே ஆயத்தம் பண்ணின தேவைகளோடு கிருபாசனத்தண்டையில் சேர்ந்தால் நமக்கு நடுக்கம் ஏற்படலாம். ஆனால் ஆவியால் நிரம்பிய நிலையில் ஏறெடுக்கப்படும் விண்ணப்பம், நாம் தைரியமாய் அவரது கிருபாசனத் தண்டை சேர நமக்கு உதவியாயிருக்கும்.

இன்னொரு இனிமையான எண்ணம், கிருபாசனத்தண்டை நாம் தைரியமாகச் சேர உதவியாயிருக்கிறது. அது விலையேறப்பெற்ற வேதவசனத்தின் வாக்குத்தத்தங்களாகும். வாக்குப் பண்ணப்படாத ஆசீர்வாதங்களைக் கேட்க நடுக்கம் ஏற்படலாம். அவசர காலங்களில் பயன்படுத்தக்கூடிய வாக்குத்தத்தங்கள் வேதத்திலுண்டு. எடுத்துக் காட்டாக : 'நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லை' எபி.13:5. ".....உன் நாட்களுக்குத்தக்கதாய் உன் பெலனுமிருக்கும்" உபா.33:25. ".....நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்குக் கொடுப்பார்" 2 யோவா.15:16. இவ்வாறு அனேக வாக்குத்தத்தங்களைக் கூறிக் கொண்டே போகலாம். ஆனால் நீங்களே தேடிக் கண்டுபிடிப்பது நல்லது. பவுல் 2 கொரி.1:20-ல் "தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே" என்று எழுதுகிறார். இந்த வாக்குத்தத்தங்களெல்லாம் விலையேறப்பெற்றவை. ஏனெனில் இவை இலவசமானவை. நமது திறமையினாலல்ல, முற்றிலும் அவரது கிருபையினால் நமக்கு அளிக்கப்படுகின்றன. தேவன் உத்தமர். அவர் பொய் சொல்லாதவர் தீத்து.1:2. இப்படி தான் கொடுத்த வாக்கை நிறைவேற்றுகிற தேவனுடைய கிருபாசனத்தண்டைக்கு நாம் தைரியமாகச் செல்லலாம்.

இன்னும் மேலான காரணத்தைச் சொல்ல வேண்டுமானால், அவர் தமது ஒரே பேறான அருமைக் குமாரனை நமக்காகத் தந்திருக்கிறார். "தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் அருளாதிருப்பது எப்படி?" என்று ரோமர் 8:32-ல் பவுல் கேட்ட கேள்வியை வாசிக்கிறோம். விசுவாசிகளாகிய நாம் நித்திய மீட்பைப் பெற்றுக்கொண்டோம். இந்த மிகப் பெரிய ஆசீர்வாதத்தை தந்த அவர் இதைவிடக் குறைந்த இரக்கங்களை நமக்குத் தருவது நிச்சயம். இவ்வாறு ஆவியால் தூண்டப்பட்டு நாம் ஏறெடுக்கும் ஜெபங்களுக்கு அவர் நிச்சயமாய்ப் பதிலளிப்பார். எனவே அவரது கிருபாசனத்தண்டையில் தைரியமாக நாம் கிட்டிச் சேர முடியும்.

மேலும் ஜெபத்தின் வல்லமையை நம்மில் பலர் பல வருடங்களாக அனுபவித்திருக்கிறோம். ஆழமான துயரங்களிலிருந்தபோது ஜெபம் விடுதலை தந்திருக்கிறது. மன அழுத்தமும் ஆவியில் சோர்பும் நிறைந்தவர்களாயிருந்தபோது ஜெபம் சூரிய ஒளியால் நம் வாழ்வில் பிரகாசித்தது. துக்க சாகரத்தில் மூழ்கி கல்லறையண்டை கண்ணீர்விட்டு நின்ற வேளையில் இனிய ஆறுதலைத் தந்து கண்ணீரைத் துடைத்ததை எண்ணிப் பார்ப்போம். வறுமையில் வாடிய நேரத்தில் உணவைப் பெற்றுக் கொண்டோமே. காகங்களோ விதவையோ உங்களை போஷிக்கா விட்டாலும் உங்கள் ஜெபத்தைக் கேட்டு எலியாவின் தேவன் உங்களை போஷிக்க வில்லையா? ஜெபத்தின் மூலம் நீங்கள் பெற்றுக் கொள்ளாதது எது? இவ்வாறு ஜெபத்தின் மூலம் ஏராளமான நன்மைகளைப் பெற்றுக்கொண்ட நீங்கள் தைரியமாகக் கிருபாசனத்தண்டையில் சேரத் தடையென்ன?

நமது மிகப்பெரிய பிரதான ஆசாரியர்

எல்லாவற்றிற்கும் மேலாக அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிற காரணத்தைப் பார்ப்போம். "நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல் எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும் ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசத்தண்டையிலே சேரக்கடவோம்" எபி.4:15:16.

தேவனாகிய கர்த்தர் மனுஷனாய் அவதரித்தார். அவரை நம்புகிற ஒவ்வொருவருடைய விண்ணப்பத்தையும் கேட்பது எத்தனை விசேஷமானது! அவர் மிகப்பெரிய பிரதிநிதியாக சிங்காசனத்தின் முன் நின்று நமது விண்ணப்பங்களை பிதாவினிடம் ஒப்படைக்கிறார். ஏனெனில் அவர் பிதாவின் அன்பான குமாரன். அவர் பிதாவோடு ஒன்றாயிருக்கிறார். அவரது சித்தம் நித்தியமான யெகோவாவின் சித்தமாயிருக்கிறது. எனவேதான் கிறிஸ்துவின் பெயரில் விண்ணப்பம் செய்கிறோம்.

இந்த மகிமையின் தேவ மனிதன் இடையாளியாயிருந்து பிதாவின் முன்பாக பாவத்திற்கான ஒரு தியாகபலியானார். எனவே இனி ஒரு பலி தேவையில்லை "ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினால் இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்" எபி.10:14. அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் இந்த ஒரே பலியினால் சிங்காசனத்தின் முன் ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள். எனவே அவர்களது ஒவ்வொரு விண்ணப்பமும் அவரால் தொடப்படுகிறது. அவரது குமாரனுடைய ஆணிபாய்ந்த கரம் இதன் மீது வைக்கப்படுகிறது. தேவனோடு இவ்வாறு போராட இது ஏதுவாகிறது.

இந்த இயேசுக்கிறிஸ்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக இவ்வுலகில் நம்மைப்போல வாழ்ந்தும் அவர் பாவமற்றவராயிருந்தார். நீங்கள் உடைந்த உள்ளத்தோடு ஜெபிக்கும் போது அதை அவர் உணர்ந்து கொள்ளக் கூடியவர். கெத்சமனேயிலே அவர் கண்ணீரோடும் பெருமூச்சோடும் ஏறெடுத்த விண்ணப்பம் அதனை அவருக்குப் போதித்தது. பாடுகளின் மூலமாக அவர் பாடுபடுகிறவர்களுக்குப் பூரணமாக பாரப்பட அவர் பூரண தகுதியுள்ளவர். உங்களோடு பகிர்ந்து கொள்ள முடியாத எந்த அனுபவமும் அவருக்கில்லை. அவற்றிலிருந்து உங்களை விடுதலை பண்ணவும் அவர் அறிவார். தேவன் உங்களைக் கைவிட்டது போன்ற எண்ணம் தோன்றினால், 'என் தேவனே என் தேவனே, ஏன் என்னை கைவிட்டீர்' என்று கதறுங்கள். அது நமது ஆண்டவருடைய அனுபவம்.

இதயத்தை நொறுக்குவது போன்ற அனைத்து கொடிய சம்பவங்களிலும் பாடனுபவிக்கும் தாசனுக்கு (இயேசு) ஒரு பங்கு உண்டு. ஆகையால் தேவனுடைய கிருபாசனத்துக்கு முன்பாக ஒரு பிரதான ஆசாரியர் நமக்குண்டு. அவர் மனவுருக்கமும், அதோடு வல்லமையும் நிறைந்தவர். எனவே இரக்க ஆசனத்திற்கு முன்பாகத் தைரியமாகக் கிட்டிச் சேருவோம்.

நீங்கள் கேட்கிற அனைத்து ஆசீர்வாதங்களும் கிறிஸ்துவின் மூலம் ஏற்கெனவே உங்களுக்கு உரியவை. ".....நிகழ் காரியங்களாகிலும், வருங் காரியங்களாகிலும் எல்லாம் உங்களுடையது. நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்" 1 கொரி.3:22:23. இவ்வாறு உங்களுக்காகப் பரிந்துபேசுகிற உங்களுக்கு முன்னே காணப்பட்டு, தேவனுக்கு முன்பாக அவராலே விண்ணப்பம் ஏறெடுக்கப்படுகிறது. ஆகவே கிருபாசனத்துக்கு முன்பாக நாம் தைரியமாகக் கிட்டிச் சேரலாம்.

தைரியமாக ஜெபியுங்கள்

பாவத்தில் வாழ்பவர்களுக்காக மிகவும் தைரியமாக ஜெபிக்க ஆரம்பிப்போம். நமது பட்டணத்துக்காகவும் தேசத்துக்காகவும், உலகமுழுவதற்காகவும் இடைவிடாமல் ஜெபிப்போம். கர்த்தர் ஒரு பெரிய எழுப்புதலை அனுப்புவாராக.

கிருபாசனத்தண்டை சேர்ந்து, தேவையேற்படும்போதெல்லாம், அவரது உதவிக்காக ஜெபிப்போம். நிச்சயமாக அதற்குரிய பலனைப் பெறுவோம். அவர் பதில் தருகிற தேவன். அந்த நிலையிருந்து அவர் விலகுவதில்லை. எனவே அவரது கிருபை இரக்கம் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ள தேவை ஏற்படும்போதெல்லாம் அவருடைய சிங்காசனத்தண்டை தைரியமாகக்கிட்டிச் சேருவோமாக.

தனிப்பட்ட சீர்திருத்தம்

Personal reformation

Robert Murray M Cheyne

ராபர்ட் முர்ரே மக்செய்ன் ஸ்காட்லாந்தைச் சேர்ந்த ஒரு சிறந்த பிரசங்கி. அவர் இயேசுவோடிருந்த மனிதர் என்று அழைக்கப்பட்டார். கிறிஸ்துவைப் போல பரிசுத்தமாக வாழ வேண்டுமென ஆசைப்பட்ட ஒரு தேவ மனிதர்.

ஒவ்வொருவருடைய தனிப் பட்ட வாழ்விலும் தூய்மையும் பயன்படு வாழ்வும் வேண்டுமென விரும்புகிற ஊழியர்களுக்கு உதவியாக இதை அவர் எழுதியுள்ளார். இந்த பரிசுத்தவான் அடிக்கடி தன்னை நிதானித்து அறிகிற வராயிருந்தார். இத்தலைமுறையின் மத்தியில் வாழும் நாம் எவ்வளவு எச்சரிக் கையுடன் வாழவேண்டும்! பாவம் பெருகி எவ்வளவாக நிர்விசாரமாக எண்ணப்படுகிறது!

பாவ அறிக்கை

ஊழியக்காரர் மார்க்க சம்பந்த மாகவும், அனுதின பழக்கவழக்கங்களி லேயும் தங்களையும் தங்கள் குடும்பங் களையும் சீர்திருத்தத்துடன் ஆரம்பிக்க வேண்டும். அதற்காக கடந்தகால பாவம் அறிக்கையிடப்பட்டு விட்டுவிடப்பட வேண்டும். அந்தந்த நாளின் நடத்துதலுக் கான கிருபைக்காக முழு இருதயத் தோடும் ஜெபித்து ஆரம்பிப்பது அவசி யம். ஏனெனில் வேதவசனம் இப்படி யாகக் கூறுகிறது: "அவர் ..... லேவியின் புத்திரரைச் சுத்திகரிப்பார்" மல்கி.3:3.

தேவநாம மகிமைக்காகவும், மனிதனுடைய நன்மைக்காகவும் என்னா லியன்றமட்டும் செயல்பட தூண்டப் படுகிறேன். எனது மனசாட்சி எப்போதும் கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட் டிருப்பதாலும், எந்த வேளையிலும் பரிசுத்த ஆவியினால் நான் நிரப்பப்பட் டிருப்பதாலும் என் இருதயத்திலும் சித்தத்திலும் முழுமையாகக் கிறிஸ்துவின் சாயலைப் பெற்றிருப்பதாலும் மீட்கப் பட்ட ஒரு பாவி இவ்வித அனுபவங்க ளோடு இவ்வுலகில் வாழ முடியும் என்ப தையும் இதற்குரிய பரிசை நித்தியத்தில் பெறமுடியும் என்பதையும் நான் விசுவாசிக்கிறேன்.

குற்றமற்ற மனசாட்சி

குற்றமற்ற மனசாட்சியுடையவர் களாயிருக்க நாம் இன்னும் அதிகமாக பாவ அறிக்கை செய்ய வேண்டும். இல்லாவிட்டால் நமது மனசாட்சி பார மடைவதோடு பாவத்தோடு பாவத்தைக் கூட்டுகிறவர்களாயிருப்போம்.

ஒவ்வொரு பாவத்திற்காகவும் நாம் கிறிஸ்துவிடம் செல்ல வேண்டும். அதற்குரிய மன்னிப்பைப் பெற வேண்டும். நமது சரீரத்தின் ஒவ்வொரு பகுதியையும் சுத்தப்படுத்துவதில் நாம் கவனம் செலுத் துவதுபோல், நம் ஆத்துமாவைச் சுத்தி கரிப்பதிலும் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். நம்முடைய ஒவ்வொரு பாவங்களுக்காகவும் இயேசு தமது முதுகில் வாரினால் அடிக்கப்பட்டார் என்பதை நினைவுகூர வேண்டும்.

ஒரு பாவத்தைக் குறித்து அது மிகச் சிறியது, எனவே அதற்கு இயேசு வின் இரத்தம் உடன் தேவையில்லை என்று எண்ணுவது தவறு. அதே போல் பாவங்கள் மிகப்பெரியவை. எனவே எப்படிக் கிறிஸ்துவிடம் வருவது என்றும் திகைக்க வேண்டாம்.

கிறிஸ்துவின் இரத்தத்தால் நாம் கழுவப்பட்டால் மட்டும் போதாது. கிறிஸ்துவின் கீழ்ப்படிதலை நாம் தரித்துக் கொள்ள வேண்டும். ஒரு சிறிய தவறு தலிலும் கிறிஸ்துவின் பரிபூரண கீழ்ப்படி தலை நாம் காண வேண்டும். சுயத்தால் நாம் செய்கிற ஒவ்வொரு பாவமும் கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு வாரடியாக விழுகிறது. கீழ்ப்படிதலுக்கு நாம் எதிராக செயல்பட்டு நியாயப் பிரமாணத்திற் குரிய சாபத்தைப் பெறுகிறோம்.

கிறிஸ்துவைப் பற்றி இன்னும் அதிகமாக அறிந்து கொள்வோம்

கிறிஸ்துவின் சர்வ வல்லமையை நாம் இன்னும் அதிகமாகக் கற்றுக் கொள்ள வேண்டும். தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகை யால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவருமாயிருக்கிறார் எபி.17:25. 1 தெச.5:23; ரோமர் 5:9, 10. இந்த வசனங் கள் எப்பொழுதும் நமக்கு முன்பாக இருக்க வேண்டும். விழித்திருந்து ஜெபித் தால்தான் சோதனையிலிருந்து விலக முடியும். 'இப்படி எழுதப்பட்டிருக் கிறதே' என்று வேத வசனத்தைப் பயன்படுத்தத் தெரிந்திருக்க வேண்டும். ஏனெனில் இவ்வாறுதான் இயேசு சோதனைகளிலிருந்து தம்மைப் பாது காத்துக் கொண்டார் மத்.4:1-11. ஆனால் மிக முக்கிய பாதுகாவலுக்காகக் கிறிஸ்து வின் கரங்களுக்குள் ஒரு சிறுபிள்ளை யைப் போல் ஒப்புவித்து, தூய ஆவியா னவர் நம்மை நிரப்பும்படி கெஞ்ச வேண்டும். தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெபிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். இது ஒரு அற்புதமான சத்தியம்.

நாம் கிறிஸ்துவை ஜீவிக்கிற இரட்சகராக இன்னும் அதிகமாக அறிந்து கொள்ளுவது அவசியம். அவர் தேடிக் கண்டுபிடித்த ஆட்டைத் தோளில் தூக்கிச் சுமக்கிறவர். அவர் மீட்டுக் கொண்ட ஆத்துமாக்களை அரசாட்சி செய்கிறவர். நமது மாம்சம் இரத்தம் ஆகியவற்றால் மேற்கொள்ளமுடியாத சோதனைகளை நமக்காகப் போராடி மேற்கொள்ளுகிறவர்.

நாம் கிறிஸ்துவை மன்றாடும் வீரராகக் கற்றுக்கொள்ள வேண்டும். அதிகமான சோதனைகளை சந்திக்க விருந்த பேதுருவுக்காக அவர் மிக அதிக மாக ஜெபித்தார். அவருடைய மார்புக் கவசத்தால் நாம் பாதுகாக்கப்படுகிறோம். என் அருகாமையிலிருந்து கொண்டே கிறிஸ்து எனக்காக ஜெபித்துக் கொண்டி ருந்தால் மில்லியன் சத்துருக்களுக்கும் நான் பயப்பட வேண்டியதில்லை. அவர் நமக்காக ஜெபிப்பது நமக்கு ஒரு திருப்தி யான அனுபவம்.

நாம் தேற்றரவாளனையும், தலைவராகிய தேவனையும் அவரது அன்பையும் சர்வ வல்லமையையும் கற்றுக் கொள்ள வேண்டும். யோவா.14:16-ல் கூறப்படுவது போல நமது அனுபவத்தில் தேற்றரவாளனைப் போல நம்மைப் பரிசுத்தப்படுத்தக் கூடியவரும் பரிந்து பேசுகிறவரும் எவருமில்லை. "நான் பிதாவை வேண்டிக் கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்க ளுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்"

நமது சரீரத்தில் பரிசுத்த ஆவியா னவர் வாழுகிறார் என்பதை நாம் ஒரு போதும் மறக்கக்கூடாது. இந்த எண்ணம் நம்மைப் பாவம் செய்ய நடுங்க வைக் கிறது 1 கொரி.6:19-20. பாவம் தூய ஆவியானவரைத் துக்கப்படுத்துகிறது. மட்டுமல்ல அவரை அணைத்துப் போடு கிறது. நம்மில் தூய ஆவியானவர் வாசம் பண்ணினால் நாம் அதிகமாக வேதம் வாசிக்கவும், அதிகமாக ஜெபிக்கவும் விழித்திருக்கவும் தூண்டப்படுவோம்.

பாவத்தைவிட்டு விலகக் கால தாமதம் கூடாது. இதுவே தேவனுடைய சமயம். சங்.119:60-ன்படி அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும்படி தீவிரிக்க வேண்டும். சோதனையை விட்டு ஓட வேண்டும். "துன்மார்க்கருடைய பாதையில் பிரவேசியாதே, தீயோரு டைய வழியில் நடவாதே, அதை வெறுத்து விடு, அதின் வழியாகப் போகாதே, அதை விட்டு விலகிக் கடந்து போ" நீதி.4:15.

கர்த்தருக்கு முழுமையான அர்ப்பணிப்பு

தொடர்ந்து நமது இருதயத்தை நாம் தேவனிடம் ஊற்ற வேண்டும். முழுவதுமாகக் கிறிஸ்துவைச் சார்ந்து வாழ வேண்டும். அவருடைய பிரமா ணங்கள் நமது இருதயங்களில் எழுதப் பட வேண்டும்.

நம்மையும் நமக்குள்ள யாவற் றையும் அவரது நித்திய புயங்களுக்குள் அடைக்கலமாக்க வேண்டும். உமது கரத்தில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் சங்.31:5. எந்த அக்கிரமமும் எந்த இரகசிய பரிசய பாவமும் ஆட்கொள்ளாதபடி அவரது உயரிய கிருபையால் அவர் நம்மை நிரப்பினால் எந்த மீட்கப் பட்ட பாவியும் அதைப் பெற்றுக் கொள்ளவும், மரணம் வரை நிலை நிற்கவும் கூடும்.

தனிப்பட்ட பரிசுத்தமின்றி பரலோகத்தில் பிரவேசிக்க முடியாது. அது மிக மிகப் பரிசுத்தமான இடம் என்பதை நாம் தியானிக்க வேண்டும். அங்கு வாழும் அனைவரும் பரிசுத்தர்.

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்க தொடர்ச்சி)

அங்குள்ள சந்தோஷம், பணி அனைத்துமே தூய்மையானவை. எனவே தனிப்பட்ட பரிசுத்தமின்றி அங்கு நாம் நுழைய முடியாது.

தீமையின் தோற்றத்தையே தவிர்க்க வேண்டும். ஏவாள், ஆகான், தாவீது ஆகியோர் கண்களின் இச்சையால் விழுந்துவிட்டனர். எனவே "மாயையைப் பாராதபடி நீர் என் கண்களை விலக்கி உமது வழிகளில் என்னை உயிர்ப்பியும்" சங்.119:37 என்றபடி நாமும் ஜெபிப்போம்.

கிருபையில் நாம் வளராவிட்டால் ஆத்துமாவில் வளர்ச்சி ஏற்பட முடியாது. கிருபையில் பெருக வேண்டும் 2 பேது.3:18. ஆண்டவரே எங்கள் விசுவாசம் வளரும்படி செய்யும் லூக்.17:5 என்று கேட்க வேண்டும். பின்னானவைகளை நாம் மறக்க வேண்டும் பிலி.3:13 இவைகளெல்லாம் நாம் கடைபிடிக்க வேண்டியவை.

எப்படி சுயத்தை மேற்கொண்டு கிறிஸ்துவைப் போல் வாழ்வது என்று தேவனிடம் கேட்கும்படி நாம் தூண்டப்படவேண்டும். அதிகத் தூய்மை, தாழ்மை, சாந்தம், பொறுமை, அன்பு ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும். நாம் 'எல்லாவற்றிலும் என்னை இயேசுவைப் போலாக்கும்' என்று எப்போதும் ஜெபிக்க வேண்டும். நம்மைத் தமது தூய ஆவியால் நிரப்பிக் கொண்டேயிருக்கும்படி ஜெபிக்க வேண்டும்.

அந்தகாரமான இந்நாட்களில் எழுப்புதலுக்கு நம்பிக்கை இருக்கிறதா?

Is there hope for revival in darkening days?

W.C.Moore (1890-1980)

நம்மைச் சுற்றிலும் கலாச்சார சீரழிவைக் காண்கிறோம். நாம் இடுக்கமும் ஆபத்தும் நிறைந்த ஒரு காலத்தில் வாழுகிறோம். ஆனால் வாய்ப்புகளும் இல்லாமலில்லை. இரவில் இருள் அதிகரிக்கும் போது ஒளி அதிகத் தேவை. நாம் உற்சாகத்துடன் எழுந்து தேவனைப் பற்றிக்கொண்டு நமது இலக்குக்கு நேராக இன்னும் அதிக வேகமாக முன்னேறுவோம். சூழ்நிலை இருளாயிருப்பினும் அதைச் சட்டை பண்ணாமல் விசுவாசத்தோடு தொடருவோம் (ஏசாயா 64:7; பிலி.3:7-14; மாற்கு 11:22-26 ஆகிய வசனங்களைப் படியுங்கள்)

நாம் பூமியில் கஷ்டங்கள் ஏற்படும்போது மலைகளின் பின்னால் ஒளித்துக்கொள்ள தேவன் எதிர்பார்ப்பதில்லை. பயமாகிய மரக்கால், அவிசுவாசம், ஆத்துமாக்களைக் குறித்த கரிசனையின்மை ஆகிய மரக்காலின் அடியிலிருந்து அகன்று விளக்கைக் கையில் எடுப்போம். "இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படிக்கு, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" மத்.5:16. தேவனுடைய அன்பு, அவர் நம்மை இரட்சித்த மிகப்பெரிய இரட்சிப்பின் உறுதி, அவரை நேசிக்கும் நேசம், நம்பிக்கை ஆகியவற்றின் ஒளி, பயத்தோடும் பதற்றத்தோடும் வாழும் மக்கள் முன்னால் வீசுவதால் அவர்கள் தேவனுக்கு நேராகத் திரும்ப ஏதுவாயிருக்கும்

எழுப்புதலுக்காக ஜெபியுங்கள்

இந்த இருள்சூழ்ந்த நாட்களில் கிறிஸ்தவர்களின் மிகப்பெரியதும் முக்கியமானதுமான கடமையும் சவாலும் ஜெபம் என்பது உண்மையிலும் உண்மை. நாம் உத்தமமாகவும் விடா முயற்சியோடும் விசுவாசத்தோடும் மக்களில் பாவ உணர்வு ஏற்பட்டு ஆத்துமாக்கள் ஆதாயம் பண்ணப்படவும் தூய ஆவியானவரின் எழுப்புதல் உலக முழுவதும் ஏற்படவும் ஜெபிக்க வேண்டும். கடைசி நாட்களில் மாம்சமான யாவரையும் சந்திப்பதாக அவர் கூறியிருக்கிறாரே.

அப்.2:17, யோவேல் 2:28-32 ஆகிய வசனங்களில் கூறப்பட்ட வாக்குத்தத்தம் : "கடைசி நாட்களில் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்" என்பதாகும். இந்தத் தீர்க்கத்தரிசனம் பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேற ஆரம்பித்துவிட்டது, ஆயினும் இதுவரை அது முழுமையாக நிறைவேறவில்லை.

ஒரு வாக்குத்தத்தத்தை தேவன் அளித்திருந்தால் நாம் கவலையீனமாக உட்கார்ந்து அதற்காக காத்துக் கொண்டே இருப்பது சரியல்ல. நாம் ஜெபத்தில் உற்சாகமடைய அவை கொடுக்கப்பட்டுள்ளன. "கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால் : இஸ்ரவேல் வம்சத்தாருக்காக நான் இதை அநுக்கிரகம் செய்யும்படி அவர்கள் என்னிடத்தில் விண்ணப்பம் பண்ண வேண்டும்" எசேக்.36:37.

மனித குலத்திற்கு இது தேவ திட்டம் மத்.6:9-15; 7:7-11 வசனங்களைப் படிக்க. எல்லாவற்றையும் குறித்து ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள் பிலி.4:6. "பின்மாரி காலத்து மழையைக் கர்த்தரிடத்தில் வேண்டிக் கொள்ளுங்கள், அப்பொழுது கர்த்தர் மின்னல்களை உண்டாக்கி, வயல்வெளியில் அவரவருக்குப் பயிருண்டாக அவர்களுக்கு மழையைக் கட்டளையிடுவார்" சகரி.10:1.

புயல் நிறைந்த மேகங்களில் வானவில்லைப் பாருங்கள்

நமது தேவன் அதிசயங்களின் தேவன். அவர் ஆபிரகாமுக்கு ஒரு குமாரனைக் கொடுப்பதாக வாக்குப் பண்ணினார். ஆனால் ஈசாக்கு பிறந்த போது ஆபிரகாம் சரீரஞ் செத்தவனென்று எண்ணத்தகுந்தவனாயிருந்தானென்று எபி.11:8-12 வசனங்களில் படிக்கிறோம்.

அற்புதங்களை நடப்பிக்கிற தேவகுமாரனாகிய நமது மகிமையின் கர்த்தர், இரு கள்வர்களுக்கிடையில் சிலுவையில் அறையப்பட்டு, சீஷர்களால் தனித்து விடப்பட்டபோது அவரைப் பின்பற்றினவர்களுக்கு அது நடு இரவின் அந்தகாரமும் பயங்கரமான தோல்வியுமாகத் தென்படவில்லையா? ஆயினும் ஐம்பது நாட்களுக்குள்ளாக மிகப்பெரிய எழுப்புதல் பெந்தெகொஸ்தே நாளில் வெடித்து சிதறியது. ஆயிரக்கணக்கான யூதர்கள் தேசத்தில் நியாயத்தீர்ப்பு ஏற்படுமுன்னால் மனந்திரும்பினார்கள். தேவன் இப்போதும் பயங்கரமான நியாயத்தீர்ப்பை அனுப்புமுன்னதாக திரளான புறஜாதியார் மத்தியில் எழுப்புதலை அனுப்புவார் என்று விசுவாசிப்போம். இஸ்ரவேலர் வெட்டப்பட்ட இடத்தில் மீண்டும் ஒட்டப்படுவார்கள்.

தேவனுக்கு உத்தமமான ஒரு சிலர்

ஆண்டவராகிய இயேசுவின் நாட்களில் அவர் பணிவிடை செய்ததும் போதனை செய்ததும், அற்புதமாக உணவளித்ததும் சுகமளித்ததுமான ஆயிரக்கணக்கான யூதர்களில் நூற்றிருபது பேர் மட்டுமே அவர் பரத்துக்கேறிய பின்பு 'ஒருமனதோடு ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்' என்று அறிவோம். ஆவியானவர் ஊற்றப்படுவது நிச்சயம். ஆனால் குறிக்கப்பட்டவர்கள் அம்மட்டும் ஜெபத்தில் தொடர்ந்திருப்பது அவசியமாயிருந்தது ஓசியா.10:12; அப்.1:14-15; 2:1-7 வசனங்களைப் படிப்போம்.

நீங்களும் நானும் ஏசா.50:7-ன் படி உற்சாகத்துடன் எழும்பி, தேவனைப் பற்றிக்கொள்வோம் ஏசா.64:7; அவர் நீதியை வருஷிக்கப் பண்ணுமட்டும் (ஓசி.10:12) அவர் வாக்குப் பண்ணினபடி யோவேல் 2:28-32, அவரது ஆவியை மாம்சமான யாவர் மேலும் ஊற்றி தமது நாம மகிமைக்காக திரள்கூட்டமான மக்களை இரட்சிப்பது உறுதி யாக்.5:7.

"அந்தப்படியே தேவன், தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிற வர்களாகிய தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ? சீக்கிரத்தில் அவர்களுக்கு நியாயஞ் செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகிலும் மனுஷ குமாரன் வரும்போது, பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ என்றார்" லூக்.18:7-8.

"இதோ நான் புதிய காரியத்தை செய்கிறேன். இப்பொழுதே அது தோன்றும்; நீங்கள் அதை அறியீர்களா? நான் வனாந்தரத்திலே வழியையும், அவாந்தர வெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன்" ஏசா.43:19.

ஒரு மனிதன் மரிக்கும்போது தன் ஆஸ்தியை விட்டுச் செல்கிறான்; ஒரு தேவப்பிள்ளை மரிக்கும் போது தன் ஆஸ்தியினிடத்திற்கு செல்கிறான்.

ஜெபம் உண்மையானதும் ஆழமானதுமான ஒரு சந்தோஷம்

Prayer : A real and deep joy

Arthur W. Pink (1886-1952)

பலருக்கு காலையிலும் மாலையிலும் 'ஜெபத்தைச் சொல்லுவது' ஒரு கடமை என்ற எண்ணத்தில் அதைச் செய்து முடித்து நிம்மதி அடைவதுபோல இருந்தாலும் அது ஒரு வெறுப்பூட்டும் செயலாக அமைந்துவிடுகிறது. ஆனால் தேவ பிரசன்னத்தில் வந்து அவருடைய முகத்தின் மகிமையை தரிசிப்பதும், அவரது இரக்க ஆசனத்தின் முன் அவரோடு உறவாடுவதும் பரத்தில் நமக்காகக் காத்திருக்கும் நித்தியமான ஆசீர்வாதத்தின் முன்னறிவிப்பு ஆகும். இந்த அனுபவத்தை உடையவர்கள் சங்கீதக்காரனோடு சேர்ந்து 'எனக்கோ தேவனை அண்டிக் கொண்டிருப்பதே நலம்' சங்.73:28 என்று சொல்லுவோம். அது இதயத்திற்கு ஏற்றது. அது இருதயத்தை அமைதிப்படுத்துகிறது. விசுவாசத்தை நம்மில் பலப்படுத்த அது எதுவானது. ஆத்துமாவுக்கு ஆசீர்வாதமானது. இவ்வித உறவு குறைவுபடுவதால் ஜெபம் கேட்கப்படாமல் போவதற்கு அது ஏதுவாகிவிடுகிறது. "கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு, அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார்" சங்.37:4.

ஆவியின் ஆசீர்வாதங்களால் ஜெபத்தில் சந்தோஷத்தை அதிகரிக்கச் செய்வது எது?

1. தேவனுடைய இருதயத்தின் விருப்பம் ஜெபத்தின் நோக்கமாகவும், தேவனை நமது பிதாவாகக் கொள்வதாகும்

சீஷர்கள் இயேசுவிடம் ஜெபிக்கக் கற்றுக்கொடுக்கும்படி கேட்டுக் கொண்டபோது மத்.6:9-ல் 'பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே' என்று ஆரம்பித்து ஜெபிக்கப் போதித்தார். மேலும் தேவன் தமது குமாரனின் ஆவியை உங்களில் அளித்து, அதன் மூலம் அவரை அப்பா, பிதாவே (கலா.4:6) என்று அழைக்கும் வாய்ப்பையும் அருளியிருக்கிறார். இதன் மூலம் ஒரு பாசமிக்க உறவு மட்டுமல்ல, தேவன்மேல் மகிழ்ச்சியும் பரிசுத்தமுமான உறவு ஏற்படுகிறது. மேலும் நமது விசுவாசத்தை உறுதிப்படுத்தவும், நமது இருதயங்களில் ஆறுதலை அளிக்கவும், அந்தபடியே நாம் இருதிறத்தாரும் ஒரே ஆவியினால் பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் மூலமாய் பெற்றிருக்கிறோம். எத்தனை சமாதானம், உறுதி, சுயாதீனம் ஆகிய வற்றை ஆத்துமாவில் பெற்றுக் கொள்ளுகிறோம்!

2. கிருபாசனத்தில் தேவன் வீற்றிருப்பதைப் பார்க்கும்போது இருதயம் அதிக மகிழ்ச்சியடைகிறது! இது ஒரு உண்மையான காட்சி, மனோபாவனையல்ல. அது ஆவிக்குரிய வெளிச்சம். ஏனெனில் விசுவாசத்தின் மூலம் 'அதரிசனமான அவரை தரிசிக்கிறோம்' எபி.11:27. "விசுவாசம் என்பது காணப்படாதவைகளின் நிச்சயம்" எபி.11:1. இத்தகைய தேவனை சிங்காசனத்தில் வீற்றிருப்பவராகக் காணும்போது அது நமது ஆத்துமாவைப் புல்லரிக்கச் செய்கிறது. எனவே எபி.4:16-ன்படி தைரியமாய்க் கிருபாசனத்தண்டையில் சேரக்கடவோம்.

3. இயேசு கிறிஸ்து மூலமாய், தேவன் பாவிகளுக்குக் கிருபையையும் இரக்கத்தையும் அருளுகிறவர் என்ற உணர்வு ஏற்படுகிறது

அவர் பெற்றுக்கொள்வதைவிட கொடுப்பதில் அதிக ஆவலுடனிருக்கிறார். ஏசாயா30:18-ல் "ஆனாலும் உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார், உங்கள்மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார்" என்று படிக்கிறோம். அவரை நாம் தேடும்படி அவர் நமக்காகக் காத்திருக்கிறார். நமது விசுவாசம் அவருடைய ஆசீர்வதிக்கும் ஆயத்த நிலையைப் பற்றிக் கொள்ள வேண்டும். 'நீதிமான்களுடைய கூப்பிடு தலுக்கு அவரது செவிகள் திறந்திருக்கின்றன'. எனவே எபி.10:22-ன்படி உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம். எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்" பிலி.4:6-7.

எல்லாவற்றிற்காகவும் தேவனையே நோக்கிப் பாருங்கள்

Look to God for all things

From a letter of John Newton (1775)

பீடத்தில் நான் நின்றபோது விடாய்த்தவனும், இருதயமற்றவனைப் போலுமிருந்தேன். பிரசங்கிக்கும்படி ஒரு வேதபகுதியை நான் ஆயத்தம் பண்ணியிருந்தேன். ஆனால் இப்போதோ அதைப் பிரசங்கிக்க முடியாத நிலையிலிருந்தேன். அக்குழப்ப நிலையில் 2 தீமோ.1:12 என் மனதில் பட்டது. எனவே அதைக் குறித்த ஆயத்தமே இல்லாத நிலையில் கர்த்தருடைய இரக்கத்தையும் அவருடைய உத்தமத்தையும் நம்பி பேசத் துவக்கினேன். எந்த நாளிலுமில்லாதபடி கர்த்தர் என் மூலமாக அன்று பேசினார்.

தேவனுடைய நற்குணம் ஆதரவு ஆகியவற்றை நமது பெலனாகக் கொள்ளும்போது நமது பெலவீனத்திலும் தாழ்ச்சியிலும் நாம் பயப்படத் தேவையில்லை என்பதற்காகவே இதைக் கூறினேன். அவரின்றி நம்மால் எதையும் செய்யக்கூடாது என்ற உணர்வு நம்மில் ஏற்படும்போது நாம் அதிக பாதுகாவலையும், தேவ உதவியையும் பெற ஏதுவாகிறது. இதனாலேயே பவுல் தமது எளிமையிலும் வறுமையிலும் களிகூர்ந்து, கிறிஸ்துவின் வல்லமையையே சார்ந்து கொண்டார். அப்படி அவர் சார்ந்து கொண்டபடியால் அவரைக் கொண்டு தேவன் பெரிய காரியங்களைச் செய்தார்.

இவ்வாறு முற்றிலும் கிருபையால் இரட்சிக்கப்பட்டு ஆரம்பம் முதல் இறுதிவரை நமது இயற்கையான விருப்பங்களுக்கு எதிராக நாம் வாழும் போது நம்மிலுள்ள சுயம் அழிக்கப்படுகிறது. பெருமை பாராட்ட எதுவுமில்லாமற் போகிறது. நாம் நம்மால் எதையும் செய்ய இயலாதவர்களென்றும் முற்றிலும் தகுதியற்றவர்களென்றும் அதனால் ஆண்டவர் நம்மைத் தள்ளி விடுவாரோ என்று எண்ணும்போதுதான் அவரது வாக்குத்தத்தம் கரிசனை ஆகியவற்றில் உற்சாகமடைவோம்.

சமாதானம் நம்பிக்கை ஆகிய வற்றின் சுவிசேஷத்தை நிலைப்படுத்துவதில் என்னை ஒரு கருவியாக பயன்படுத்த எவ்வளவு ஆவலோடிருந்தேன்! அதற்கு ஒரே ஒரு வழிதானுண்டு. மறுபடியும் மறுபடியும் இயேசுவின் வல்லமையையும் கிருபையையும் சொல்லுவதுதான் அந்த வழி. நீங்கள் உங்களைச் சந்தோஷப்படுத்த வேறு எதுவும் தேவையில்லை. உங்கள் கண்கள் கருத்தோடு இரட்சகரின் மேல் பதிந்திருக்க வேண்டும். அவரது மகிமையைக் காணத்தக்கதாக அவைகள் தூய ஆவியால் அதிகப் பிரகாசமடைந்திருக்க வேண்டும்.

அவர் தகுதி வாய்ந்த இரட்சகர்! எல்லோரையும் இரட்சிக்க வலிமையும் அதிகாரமும் உருக்கமும் அவரிடமுண்டு. நாம் அவர் மீது நமது நம்பிக்கையை வைத்தால் அவர் நம்மில் தந்துள்ள நல்ல எதிர்பார்ப்புகளையும், விருப்பங்களையும் நல்ல முறையில் செய்து முடிக்கக் கூடிய உத்தமராயிருக்கிறார்.

உங்கள் நம்பிக்கை அவர் மேலிருக்கட்டும். சூழ்நிலை எப்படியிருந்தாலும் தடைகள் உள்ளும் புறம்பும் காணப்பட்டாலும் அவரையே விசுவாசியுங்கள். ஆபிரகாம் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாயிருக்கிறார். எல்லாத் தடைகளையும் கடந்து நம்பிக்கையற்ற நிலையிலும் துணிவுடனிருந்தார். தோற்றத்தைக் கண்டு அவர் துவளவில்லை. ஏனெனில் வாக்குத்தத்தம் பண்ணினவர் அதை நிறைவேற்ற வல்லவர் என்று அவர் விசுவாசித்தார்.

உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள். அவரைத் தேடுகிறவர்களுக்கு அவரது சர்வ வல்லமை கிருபையால் வெளிப்படும். எல்லாம் நன்மைக்கேதுவாக இணைந்து செயல்படும். அவர் நமக்கு அனுப்பித் தருகிறவைகளெல்லாம் நமக்குத் தேவை

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்க தொடர்ச்சி)

யானவைகள். அவர் நமக்குத் தராதவைக ளெல்லாம் நமக்குத் தேவையற்றவை.

சிலுவை சுமப்பதில் திருப்தி யாயிருப்போம். ஏனெனில் நமக்கு முன்பாக அனேகர் சிலுவை சுமந்திருக் கிறார்கள். உங்களுக்குப் பொறுமை தேவை. எது தேவையோ அதை கர்த்தர் தருவார். ஆனால் நிலையான சமாதானத் தைப் பெற நமது சித்தம் கீழடக்கப்பட வேண்டும்.

அவரது செட்டைகளின்கீழ் உன்னை மறைத்துக்கொள். அவரது கரிசனை வல்லமை போன்றவற்றைச் சார்ந்து கொள்ளுங்கள். மிகக் கொடிய நோயாகிய பாவத்திலிருந்து குண மடைய அவர் கிருபையாக எடுத்துக் கொள்ளும் முயற்சியில் அவரை ஒரு வைத்தியராக நோக்கிப் பார்ப்போம். அவரது ஆலோசனைகளை ஏற்றுக் கொள்வோம். உங்கள் தெரிந்து கொள்ளு தல்கள் வேண்டாம். பாதை தெரியாத வேளைகளில் அவரே உங்கள் தலைவர் என்று திருப்தி கொள்ளுங்கள். அவர் பாதை தெரிந்தவர். உங்களை மூழ்கிவிட அனுமதிக்கமாட்டார். புத்துணர்ச்சிதரும் பருவ காலங்களை அவர் உங்களுக்கு நியமித்திருக்கிறார். அவர் உங்களை மறப்பதில்லை என்று கண்டு கொள் ளுங்கள். அவரது கிருபாசனத்தைக் கிட்டிச் சேருங்கள்.

கிறிஸ்து நமது ஜீவன்

Christ our Life

Ruth Paxson (1889-1949)

நாம் அவரைப் போலாகும்படி கிறிஸ்து நம்மைப் போலானார். அவர் இவ்வுலகில் அவதரித்தபோது தேவத்துவ மும் மனுஷத்துவமும் இணைந்தது. எனவே நாம் மறுபடியும் பிறக்கும்போது தேவத்துவமும் மனிதத்துவமும் இணை கின்றன. இவ்வாறு தூய ஆவியானவர் ஒரு விசுவாசியில் புதிய தன்மையை உருவாக்கும்போது அவர் கிறிஸ்துவுக்கும் அக்கிறிஸ்தவனுக்குமிடையில் ஏற் படுத்தும் உறவு காலாகாலமாக நீடிக்கக் கூடியது. உயர்த்தப்பட்ட கிறிஸ்து அவரது பரிபூரணத்தையும் அவரது வெற்றியையும், சந்தோஷத்தையும், தூய வாழ்வையும் நமக்குள் அளிக்கிறார்.

கிறிஸ்தவனாயிருப்பது, மகிமைப்படுத்தப்பட்ட கிறிஸ்து நம்மில், அவரது பிரசன்னத்தோடும், வல்லமை யோடும் நம்மை ஆட்கொண்டு நம்மில் வாழ்வதாகும். 'கிறிஸ்து எனக்கு ஜீவன்' பிலி.1:21 என்று பவுல் சொன்னது போன்ற ஒரு வாழ்வு என்று அதனைக் கூறலாம். எல்லாவற்றிலும் நாம் கிறிஸ்துவில் வளரவேண்டும். நமது உள்ளான ஆவியில் விதைக்கப்பட்ட தெய்வீக விதை அவரது பரிபூரணத்தை அடைய வேண்டும். கிறிஸ்து நமது இருதயம், உள்ளம், சித்தம் ஆகிய வற்றின் வாழ்வாக அமைவதால் கிறிஸ்து நம் மூலமாகவே சிந்திக்கவும், நம் மூல மாகவே அன்பு கூரவும், நம் மூலமாகவே சித்தம் கொள்ளவும் வேண்டும். அதாவது கிறிஸ்துவின் ஜீவன் நம்மிலிருந்து நம்மை நிரப்புவதோடு எப்போதும் நிரப்பிக் கொண்டேயிருக்க வேண்டும்.

இது எப்படியாகும்? என்று நிக்கோதேமுவைப் போல கேட்கிறீர் களா? நான் வாழும் இல்லத்தில் எனக்கு இரக்கம் காண்பிக்கிறவர்களோ இல்லை. என்னைப் பரிகாசம் பண்ணுகிறவர் களும் கடிந்து கொள்ளுகிறவர்களுமே இருக்கிறார்கள். இங்கு நான் பாவி யாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறேன். எனது வாழ்வு முற்றிலும் தோல்வி யாகவே இருக்கிறது, அல்லது சமூக வட்டத்தில் நான் எப்படி உத்தம கிறிஸ்தவனாக வாழமுடியும்? இங்கே ஒருவராவது தேவனுடைய பெயரை உச்சரிப்பதோ, எண்ணிப் பார்ப்பதோ இல்லையே, அல்லது முற்றிலும் மாம்ச சிந்தையோடு மட்டும் வாழுகிற மக்கள் மத்தியில் நான் எப்படி ஆவியில் வாழ முடியும்? மேலும் எனது அங்கத்துவம் ஒரு உலக சிந்தையுள்ள சபையி லிருக்கும் போது என் ஆவிக்குரிய வாழ்வை நான் பெலப்படுத்தக்கூடிய உணவு எனக்கு அளிக்கப்படவில்லை யே! என்று பல்வேறான கேள்விகள் எழுப்பப்படலாம்.

திராட்சச்செடியும் அதன் கொடிகளும்

கிறிஸ்து பரலோகத்தில் வீற்றி ருப்பது போல நாம் இப்பூவுலகில் வாழ் கிறோம். நம்மிலிருக்கும் இயேசு நாம் எங்கிருந்தாலும் அவர் போல வாழச் செய்ய முடியும். அப்படி நாம் வாழ்வது அவருடைய பேராவல். அவர் பூமியில் வாழ்ந்த கடைசி நாட்களில் தமது சீஷரோடு இதனைப் பகிர்ந்து கொண் டார். அவர்களை விட்டுத் தாம் பிரிந்து போவதைக் குறித்து அவர் சம்பாஷித்த போது, அவரின்றி தாங்கள் உத்தம சீடர்களாக எப்படி வாழக்கூடும் என்று அவர்கள் கலங்கினர். ஆனால் அவர் தாம் அவர்களோடு ஆவிக்குரிய நிலையில் பிரசன்னமாயிருக்க முடியும் என்றும் அது உறுதியானதும் உண்மையானதுமா யிருக்குமென்றும் அவர்களை தைரியப் படுத்தினார். அது திராட்சச் செடியின் ஜீவன் கொடிகளுக்குள் செல்லுவதற்கு இணையானது என்று உவமைப்படுத் தினார். "நானே திராட்சச் செடி, நீங்கள் கொடிகள், ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான், என்னையல்லாமல் உங்களால் ஒன்றுஞ் செய்யக்கூடாது" யோவா.15:5.

நான் அவர்களில்

நமது ஆண்டவருடைய பிரதான ஆசாரியத்துவ ஜெபத்தைக் கவனிப் போம் : யோவா.17:23-26 வசனங்களை வாசிப்போம்.

'நான் அவர்களில்' என்பது எளிய, ஆனால் முக்கியத்துவம் வாய்ந்த ஜெபம். இந்த மிகச்சிறிய வட்டத்திற்குள் அவர் தமது வாஞ்சையை பல நூற்றாண்டு களுக்கு முன்பாகவே மூச்சாக ஊதியிருக் கிறார். இயேசுக் கிறிஸ்துவின் வைராக் கியமான வாஞ்சை கிறிஸ்தவர்களின் மூலமாக வெளிப்பட வேண்டும்.

கிறிஸ்து என்னில் வாழுகிறார்

இந்த அனுபவம் பவுல் அப்போஸ்தலனின் பிரசங்கத்திலும் அனுபவத்திலும் இழைந்தோடுவதைக் காணமுடிகிறது. அவரது மிஷனெறிப் பயணங்களும் பணிகளும் கிறிஸ்து அவரில் வாழ்வதனைப் பறைசாற்றின. எனவே அவருடைய தனிப்பட்ட ஆவிக் குரிய வாழ்வின் முத்திரை வாக்கியம் : 'கிறிஸ்து என்னில்' என்பதே.

கிறிஸ்துவுடனே கூடச் சிலுவை யில் அறையப்பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன்; இனி நானல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக் கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்பு கூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமார னைப் பற்றும் விசுவாசத்தினால் பிழைத் திருக்கிறேன்" கலா.2:20.

கிறிஸ்து எனக்கு ஜீவன் பிலி.1:21

கிறிஸ்து என்னில் வாழுகிறார், எனவே கிறிஸ்து எனது ஜீவன் என்பதை விடக் கூடுதலாகப் பவுலுக்கு எதுவுமே தேவையில்லை. மகிமைப்படுத்தப்பட்ட இயேசு அவரது வாழ்விலிருந்தபடியால் அவரது ஆவிக்குரிய அனுபவம் எல்லாம் அதில் அடங்கி யிருந்தது. எனவே அவரது வாழ்வு உன்னத நிலையிலிருந்தது.

சபைக்கு அவர் உபதேசித்த போது 'கிறிஸ்து உங்களில்' என்ற மையக் கருத்துடன் பேசினார். அவரது எல்லாப் போதனைகளிலும் அது பிரதிபலித்தது. அவருடைய நிருபங்களில் அது வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது.

"புறஜாதிகளுக்குள்ளே விளங் கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமை யின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்து வானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்" கொலோ.1:2.

'கிறிஸ்து உங்களில்' என்பதே அவரது சேவையின் அடிப்படை வாஞ்சை. ஊழியத்தில் அவர் வெவ்வேறு வழி முறைகளைப் பயன்படுத்தினாலும், அவர் எல்லாருக்கும் எல்லாமானாலும் அவருடைய வாழ்வு, முடிவு, நோக்கம் எல்லாம் அவரது செய்திகளைக் கேட்ட ஒவ்வொருவரிலும் கிறிஸ்து உருவாக வேண்டுமென்பதே.

'என் சிறுபிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்க ளுக்காக மறுபடியும் கர்ப்ப வேதனைப் படுகிறேன்' கலா.4:19.

கிறிஸ்தவன் கிறிஸ்துவை இரட்ச கராக ஏற்றுக்கொண்டு அவரை ஆண்ட வராக முடிசூட்ட வேண்டும். ஒருபடி

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்க தொடர்ச்சி)

மேலாக அவரை ஜீவனாக ஒப்புக் கொள்ள வேண்டும். கிறிஸ்தவ வாழ்வு மறுரூபமடைந்த ஒன்று. அது ஒப்படைக்கப்பட்ட வாழ்வு மட்டுமல்ல, கிறிஸ்துவைப் போன்ற வாழ்வு. கிறிஸ்தவனின் மையம் கிறிஸ்து. அதன் சுற்றுவட்டமும் அதனுள் அடங்கிய யாவும் கிறிஸ்துவே. 'கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார்' கொலோ.3:11. 'நம் முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது நீங்களும் அவரோடேகூட மகிமையில் வெளிப்படுவீர்கள்' கொலோ.4:1.

பரிபூரண ஒருமை

ஒரு விசுவாசியின் ஆவிக்குரிய சரித்திரம், இரண்டு சொற்றொடர்களில் அடங்கும். அவை 'நீங்கள் என்னிலும்', 'நான் உங்களிலும்' என்பதாகும். ஒரு விசுவாசியும் கிறிஸ்துவும் ஒன்றாயிருக்கிறார்கள். கிறிஸ்து இல்லாத சபை தலையில்லாத சரீரம். தலை நிறைவடைய சரீரம் வேண்டும். "எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாக தந்தருளினார்" எபே.1:23. கொலோ.2:9-10 வசனங்களையும் படிக்க.

கிறிஸ்துவின் பரிபூரணம் கிறிஸ்தவனின் பரிபூரணம் என்பது தேவ திட்டம் என்பது தெளிவாகிறது. கிறிஸ்துவின் வாழ்வு பரிபூரணமாயிருந்ததால் மனிதர் விசுவாசத்தாலும் அன்பாலும் அவரிடம் இழுக்கப்படுகிறார்கள். இவ்வாறு மனித பாண்டங்களில் ஆண்டவரின் அழகு, தூய்மை, மகிமை ஆகியவை பிரகாசிக்க வேண்டும்.

கிறிஸ்து வருகிறார்

Christ is coming

John J. Huntt

பரிசுத்த வேதாகமம் கிறிஸ்துவை அதன் மையமாக தூய ஆவியால் வெளிப்படுத்துகிறது. அதன் தீர்க்க தரிசனங்கள் கிறிஸ்துவை படம்பிடித்துக் காண்பிக்கின்றன. அதன் வாக்குத் தத்தங்கள் கிறிஸ்துவின் மூலம் நமக்கும் சொந்தமாகின்றன. இதன் சரித்திரம் அவரது இரு வருகைகளையும் குறிப்பிடுகின்றன. அதன் காலங்கள் கிறிஸ்துவினால் ஏற்பட்டவைகள் எபி.1:2. இதன் கூடாரங்களும் ஆலயங்களும் கிறிஸ்துவைத் தெளிவுபடுத்துகின்றன. கிறிஸ்து இல்லாத வேத புத்தகம் இருதயமற்றது. இதன் மீட்பு கல்வாரியிலிருக்கிறது.

இதோ மணவாளன் வருகிறார் என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. நிச்சயமாக அவர் வரப்போகிறார். சமயம் நிச்சயமாகிவிட்டது. கால அட்டவணை அச்சிடப்பட்டாயிற்று. அந்த நாளை தேவன் அறிவார். அதை எவரும் தவிர்க்க முடியாது. அவர் வசனத்தின் மூலம் அதை உறுதிப்படுத்தியிருக்கிறார். கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நிச்சயமானது. ஆமென் கர்த்தராகிய இயேசுவே வாரும்.

எழுப்புதலுக்காக இதய கதறல் 2022

(உயிர்மிட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)

இடம் :	காலம்:
St. John's Church C.S.I. மலைக்கோடி, வேலூர்	08-01-2022 சனிக்கிழமை காலை மணி 10.00 முதல் மாலை 5.00 மணிவரை

(2-ம் பக்க தொடர்ச்சி)

"ஆகையால், அவர்களை நாசம் பண்ணுவேன் என்றார்; அப்பொழுது அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட மோசே, அவர்களை அவர் அழிக்காதபடிக்கு, அவருடைய உக்கிரத்தை ஆற்றும்பொருட்டு, அவருக்கு முன்பாகத் திறப்பின் வாயிலே நின்றான்" சங்.106:23.

நீங்கள் மோசேயை போல, ஜனங்கள் அழியாதபடிக்கு திறப்பிலே நின்று ஜெபிப்பீர்களா?

*****

இயேசுவானவர் எங்கும் நடந்து திரிந்து பிரசங்கித்தும் மக்களைக் குணமாக்கியும் வந்தார். ஆனால் திரளான மக்களைக் கண்டபோதோ அவர் மனதுருகினார் என்று வாசிக்கிறோம் (மத்.9:35,36). ஏற்கெனவே அவர் மனதுருக்கமுள்ளவர்தானே? ஆனால் நிலையை நேரில் பார்த்தபோது அது அவரை இன்னும் உலுக்கி உருக்கிற்று. பார்ப்பது பார்ப்பதுதான்!

வீடு முழுவதும் நாட்காட்டிகளையும் வசனங்களையும் தொங்கவிடுவதற்குப் பதிலாக உலகப்படம் ஒன்றை மாட்டுங்கள். நற்செய்தி எட்டியிராத பகுதிகளுக்கு வண்ணமிடுங்கள். இந்தப் படத்திற்கு முன்பாக நின்று பார்க்கும் போது, ஆண்டவர் உங்கள் இருதயத்தில் ஒரு பாரத்தைத் தீக்கொளுத்திடுவார். அதுதானே வில்லியம் கேரிக்கு (1761-1834) நடந்தது! செருப்புத் தொழிலாளியாயிருந்த அவர் தனது தொழிலறையில் ஓர் உலகப்படத்தை ஒட்டி வைத்திருந்தார். அடிக்கடி அந்த படத்தின் முன் நின்றுகொண்டு, சந்திக்கப்படாத நாடுகளின் மீது விரலை வைத்து ஜெபிப்பாராம். நடந்ததென்ன? மேற்கு வங்காளம் வந்து சேர்ந்தார். இந்திய மொழிகள் பலவற்றில் பாண்டித்தியம் பெற்றார். ஏதோவொரு விதத்தில் விவிலியத்தை 40 இந்திய மொழிகளில் மொழியாக்கம் செய்வதில் ஈடுபாடு கொண்டிருந்தார். நம்பமுடிகிறதா?

எழுப்புதலுக்காக இதய கதறல் 2022
Heart cry for Revival 2022

மாதம்	தேதி	இடம்
ஜனவரி	08.01.2022 Saturday	St. Johns C.S.I மலைக்கோடி, Vellore
பெப்ரவரி	12.02.2022 Saturday	Church of God Srivilliputhur
மார்ச்	12.03.2022 Saturday	St. Mathiya Church Meerankulam Pastorate
ஏப்ரல்	09.04.2022 Saturday	Shekina Full Gospel Mission Pasuvandanai, Tuticorin Dt.
மே	14.05.2022 Saturday	A.G. Church Vettuvenni, Marthandam
ஜூன்		
ஜூலை		
ஆகஸ்ட்	15.08.2022 Monday	Zion Prayer House Villivakkam, Chennai
செப்டம்பர்	09.09.2022 Friday	Jesus Cores Assembly Chennai
அக்டோபர்		
நவம்பர்		
டிசம்பர்		

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

ஜெபத்தின் மூலமாக நாம் தேவனைக் கிட்டிச்சேரும்போது **கிருபை**யின் சிங்காசனத்தில் வீற்றிருக்கிற இராஜாவுக்கு முன்பாக வருகிறோம்.

கிருபை தேவை என்று உணர்ந்தவர்கள் அவரது கிருபாசனத்தைக் கிட்டிச் சேர பயப்பட வேண்டாம்.

நமது சரீரத்தின் ஒவ்வொரு பகுதியையும் சுத்தப்படுத்துவதில் நாம் கவனம் செலுத்துவதுபோல், நம் **ஆத்துமா**வைச் சுத்திகரிப்பதிலும் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

இந்த இருள்சூழ்ந்த நாட்களில் கிறிஸ்தவர்களின் மிகப்பெரியதும் முக்கியமானதுமான கடமையும் சவாலும் **ஜெபம்** என்பது உண்மையிலும் உண்மை.

ஒரு விசுவாசியின் ஆவிக்குரிய சரித்திரம், இரண்டு சொற்றொடர்களில் அடங்கும். அவை '**நீங்கள் என்னிலும்**', '**நான் உங்களிலும்**' என்பதாகும்.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason